பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆனி: 23 நஜப்: 3 இதழ்: 14

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-7-7




... OF SRI LANKA
RECEIVED
1978 -7-07
PERIODICAL DIVISION
LIBRARY

## மிர்ஸாவும் விலகினர்!

புதுடில்லி, ஜூலை, 6

ஜனதா கட்சியின் பாராளுமன்றக் குழுவின் பிரதித் தலைவர் திரு. எஸ். எம். மிர்ஸாவும் இன்று தமது பதவியை ராஜினாமாச்செய்தார். உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து திரு. சரண்சிங் விலக்கப்பட்டதை எதிர்த்து திரு. மிர்ஸா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு

# தொலைபேசிசீர்கேடு

## நிரந்தரமாகத் தீர்க்கப்படும்

### பேரவையில் அமைச்சர் உறுதி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்குமிடையே டெலிபோன் இணைப்பில் ஏற்பட்டு வரும் சீர்கேட்டை நிரந்தரமாகத் தீர்த்துவைப்பதாகத் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. ஷெல்டன் ஜெயசிங்கா உறுதியளித்துள்ளார்.

நேற்று, தேசிய அரசுப் பேரவையில் ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம், கொழும்பு-யாழ், தந்தித் தொடர்புகளில் ஏற்பட்டுவரும் சீர்கேடு பற்றிக் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு மொழியை அளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே 16 லைன்கள் வேலைசெய்கின்றன. இக்கம்பிகள் பூமிக்கு மேலாகவே போடப்பட்டிருப்பதால் மரங்கள் விழுவதாலும், கம்பிகள் களவுபோவதாலும், வேறு காரணங்களினாலும் அடிக்கடி சீர்கேடு அடைகின்றன. இதற்கு உடனடிப் பரிகாரமாகக் கொழும்பிலிருந்து அனுராதபுரத்திற்கும், அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கும் ரேடியோத் தொடர்பு ஏற்படுத்த முயற்சி எடுக்கப்படும். பின்னர், இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையில் நுண் அலைத் தொடர்பு ஏற்படும்போது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலும் நுண் அலைத் தொடர்பு ஏற்படுத்தி, டெலிபோன் சீர்குலைவை நிரந்தரமாக நீக்கிவிடுவதாக அமைச்சர் தெரிவித்தார். (ம)

அடுத்த மாதம் தொடக்கம்

## தேசிய சுவீப் டிக்கட் விலை அதிகரிப்பு!

### ஜாதிக சம்பத்த ரத்து

(கொழும்பு)

இதுவரை 50 சதமாக விற்கப்பட்டுவந்த சுவீப் டிக்கட்டுகள் அடுத்த மாதம் முதற் கொண்டு ஒரு ரூபாய்க்கு விற்கப்படும்.

அதேசமயம் ஜாதிக சம்பத்த சிட்டிழுப்பு தற்காலிகமாக நிறுத்தப்படும்.

இத்தகவலை தேசியலொத்தர் சபைத் தலைவர் திரு. எச். ஆர் பியசிறி நேற்று வெளியிட்டார்.

50 சதத்திற்கு விற்கப்படும் சுவீப் டிக்கட்டுகளின் விலை அதிகரிப்பு 673 வது சுவீப்பிலிருந்து (அடுத்த மாதம் 6ம் திகதி) நடைமுறைக்குவரும் அத்துடன் இச்சீட்டிழுப்பு மாதம் 5 தடவைகள் நடத்தப்படும்.

சுவீப் டிக்கட்டுகள் அச்சடிக்கும் தாள்களின் விலை உயர்வு, அச்சுக்கூலி அதிகரிப்பு, விளம்பரக் கட்டணம் உயர்வு போன்ற இன்னோரன்ன காரணங்களால் லொத்தர் சபையின் செலவினங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் போதாமலிருப்பதாகவும் இத

(6-ம் பக்கம் பார்க்க)

துரையப்பா கொலை வழக்கு

# உடலில் இருந்த காயங்கள் பற்றி சட்டவைத்தியர் நேற்று விளக்கினர்

## யோகநாதன் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை

(கொழும்பு)

காலஞ்சென்ற துரையப்பாவின் சடலத்தின்மீது பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் நேற்று துரையப்பா கொலை வழக்கில் சாட்சியமளித்தார். துரையப்பாவின் உடலில்இருந்த காயங்கள்பற்றி அவர் விளக்கிக் கூறினர்.

யாழ்ப்பாணம் முன்னாள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா கொலைவழக்கு நேற்று மீண்டும் கொழும்பு மேல்நீதி மன்றத்தில் நீதிபதி சோஸா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது முதலாம் எதிரியின் சிரேஷ்ட சட்டத்தரணி எம். சிவசிதம்பரத்தின் கோரிக்கையின் பேரில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் இயக்குநர் திரு. மா. யோகநாதன் திரும்பவும் அழைக்கப்பட்டுக் குறுக்குவிசாரணைசெய்யப்பட்டார்.

சட்டத்தரணி: முதலாம் எதிரி முன்னால் வந்து மோதினர் என்று கூறினீர்?-ஆம்.

சட்: அரச சட்டத்தரணியிடம் மல்லாகம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததாகக் கூறினீர்?-ஆம்.

சட்: அந்தச் சாட்சியத்தில் ஒருவர் பின்னால் துவக்குடன் வந்தாரென்று நீதிபதியிடம் கூறினீரா?-இல்லை,

### சட்ட வைத்தியர் சாட்சியம்

இதன் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம், தாம் நடத்திய பிரேத பரிசோதனை பற்றிய விபரங்கள் தொடர்பாக சாட்சியமளித்தார். பின் விபரங்களை அவர் வெளியிட்டார்.

197?ம் ஆண்டு ஜனவரி 28ந் திகதி காலை 11-15 மணிக்கு, காலஞ்சென்ற துரையப்பாவின் சடலத்தின் மீது பிரேத பரிசோதனை நடத்தினேன். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் இது நடந்தது. இருவர் சடலத்தை அடையாளம் காட்டினர். ஒருவர் சிவம், மற்றவர் யோகநாதன்.

இந்தக் கட்டத்தில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் ஜூரி சபையினருக்கு விளங்கக்கூடியதாகச் சட்ட வைத்திய அதிகாரி, தமது சாட்சியத்தைத் தமிழில் தரும்படி கேட்டுக்கொண்டார்.

டாக்டர் சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது; திரு.

(6-ம் பக்கம் பார்க்க)

## எம்.ஜி.ஆர். - கலைஞர் - கம்யூ. செயலாளரை வி. பி. சந்தித்துப் பேசினர்

### ஈழத்தமிழர் நிலைபற்றி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் தமது தமிழக விஜயத்தின்போது தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும் தி.மு.க. தலைவருமான கலைஞர் மு. கருணாநிதியை சென்னை சென்ற முதல் நாள் சந்தித்து உரையாடினர். தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கலைஞரை திரு. வி. பி, சந்தித்தபோது ஈழத்தமிழர் பிரச்னை, செந்தமிழர் இயக்க நிலை என்பன பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இச்சந்திப்பின்போது தமிழ்நாடு சட்டசபையின் தியாகராய நகர் தி.மு.க, உறுப்பினர் திரு. சந்திரன் ஜெயபாலும், முன்னாள் இலங்கை தி. மு. ச. அமைப்பாளரும், தற்போது தமிழகத்தில்வசித்து வருபவருமானதிரு. மணவைத் தம்பியும் உடனிருந்தனர்.

திரு. பொன்னம்பலம் சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்ட மேலவை தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானத்தின் 71வது பிறந்ததின விழாவிலும் திரு. வி. பி. கலந்து கொண்டார். திரு. பொன்னம்பலம் இவ்விழாவில் வைத்து திரு. எம், ஜி.

(6-ம் பக்கம் பார்க்க)

## இராசுவும் கலந்து கொண்டார்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் நேற்று இரவு வெகு நேரம்வரை நடைபெற்றது. இக் கூட்டத்தில் மட்டக்களப்பு முதலாவது உறுப்பினர் திரு. செ. இராசதுரையும் கலந்து கொண்டார்.

அரசியல் சட்டத்திருத்தம் தொடர்பான விஷயங்கள் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது. (ம)

எஸ். எஸ். ஆர். கொலை முயற்சி வழக்கில்

# கருணாநிதி விடுதலை

(சென்னை)

நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரனைக் கொலை செய்ய முயன்றதாக திரு. மு. கருணாநிதி மீதும் மற்றும் 5 பேர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் திரு. கருணாநிதியும் மற்றும் நால்வரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

திரு. ராஜேந்திரனை கொலை செய்யமுயன்றதாக தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி, தி. மு. க. பொதுச்சபை உறுப்பினர்கள் கோவை இராசமாணிக்கம், ஜி. இலட்சுமணன் (எம்.பி) மு. சண்ணப்பன், கோபாலசாமி, செபஸ்தியான் ஆகியவர்கள் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்கு சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விசாரணை முடிவில் நீதிபதி திரு. கருணாநிதியையும் ஏனைய நான்கு பேரையும் விடுதலை செய்தார். ஆறுவது எதிரியான செபஸ்தியானுக்கு 300 ரூபாய் அபராதம் அல்லது ஒன்றரை மாதம் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

கணக்காளர் / நிதி முகாமையாளர் - தரம் 1

1. தகைமைகள்
   1. இரண்டு வருட கால அனுபவத்துடன், கோஸ்ட் அன்ட் வேக்ஸ், கணக்காளர் நிலையப் பரீட்சையின் பகுதி 1, 11, 111 ஆகியவற்றில் பெற்றுள்ள சித்தி அல்லது பட்டயம் பெற்ற கணக்காளர் பரீட்சையின் பகுதி 1, 11, 111 ஆகியவற்றில் பெற்றுள்ள சித்தி அல்லது ஏ. சி. சி. ஏ.
   அல்லது
   2 வருட கால அனுபவத்துடன் கணக்கியலினை ஒரு பாடமாகக் கொண்டுள்ள பட்டதாரி
   அல்லது
   10 வருட கால அனுபவம் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர்.
2. சம்பள அளவு திட்டம்; 500 — 825 ........................ 20×10, 25×5
   குறித்த சம்பளத் திட்டத்தின் தகுதிக்கு ஏற்றவாறு சம்பளம் நிர்ணயிக்கப்படும்.
3. வயது: 35--55 வரை.
4. பிணை: 3000/ரூபா காசுப்பிணை, ரூபா 10000/- உறுதிப்பிணை.
5. முடிவுத் திகதி: 2 -07-78.

மேற்படி தகைமைகள் உள்ள விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பத் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு, காரியதரிசி, யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 74/3, அல்விரட் துரையப்பா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 24-07-78-ந் திகதி அல்லது அதற் முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவு தபாலில் அனுப்ப வேண்டும்.

தலைவர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978 யூலை 5. 9757

---

யாழ்ப்பாண மாநகர
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் - தரம் 1

1. தகைமைகள்:
   பொருளாதாரவியல் அல்லது வர்த்தகம் அல்லது கணக்கியலில் விசேட பட்டம் பெற்ற பட்டதாரியாமிருப்பதுடன் கூட்டுறவுப் பயிற்சியும், மூன்று வருட கால அனுபவமும்
   அல்லது
   வர்த்தக அல்லது கைத்தொழில் தாபன நிறைவேற்றுப் பதவியில் மூன்று வருட கால அனுபவத்துடன் கூடிய பட்டதாரி,
   அல்லது
   கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரமும் மூன்று வருட கால அனுபவமும் உடைய பட்டதாரி,
   அல்லது
   பதினைந்து வருட கால அனுபவமும் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர்
2. சம்பள அளவுத் திட்டம்; 600 -- 1,000 ........................ 25×10, 30×5
   குறித்த சம்பளத் திட்டத்தின் தகுதிக்கேற்றவாறு சம்பளம் நிர்ணயிக்கப்படும்.
3. வயது; 35 — 55 வரை
4. பிணை: ரூபா 3000/- காசுப்பிணை ரூபா 10000/- உறுதிப்பிணை.
5. முடிவுத் திகதி: 24-07-78

மேற்படி தகைமைகள் உள்ள விண்ணப்பங்கள் யாவும், விண்ணப்பப்படிவத் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு காரியதரிசி, யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 74/3, அல்விரட் துரையப்பா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 24-7-78-ந் திகதிக்குஅல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

தலைவர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978 யூலை 5, 9756

---

## வரி விளம்பரம்

### தேவை

பெண்களுக்கான உடைகள் தைப்பதற்கு திறமைவாய்ந்த பெண்கள் தேவை. நேரில் வரவும். S. V. P. சிவம் டெயிலரிங்மார்ட், 18, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். 9749

---

பிரபல்யமான விளையாட்டுப் பொருள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனம் ஒன்றிற்கு கடைச்சல் வேலை தெரிந்தவர்கள் தேவைப்படுகின்றனர். வேலை பழக ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்ப முடிவு திகதி 15-7-78. விண்ணப்ப முகவரி விளம்பர இல. 9753, ஈழநாடு, யாழ்நகர். 9753

### பயிற்சி

மின் இணைப்புத் தொழில் நுட்பவியல் மேற்படி பயிற்சி நெறியில் சேரவிரும்பும் மாணவர்கள் உடனடியாக கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளவும். 17வயதிற்குமேற்பட்ட பாடசாலையை விட்டுவிலகியவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். குறிப்பிட்ட தொகையினருக்கே இடம் உண்டு. அதிபர், இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு. 9755

---

## கேள்வி விளம்பரம்

உரும்பராய்-ஊரெழு பட்டினசபை

கீழ்க்காணும் வேலை பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து 1978ம் ஆண்டு ஆடி மாதம் 24ம் திகதி நண்பகல் 12மணி வரையும் சீல்வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/-ம், கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-ம் செலுத்தி 20-7-78 பி. ப. 2 மணிவரையும் பட்டின சபைக் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்களை இணைப் பிரதிகளாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். அல்லது கந்தோரிலுள்ள ரெண்டர் பெட்டியில் போடவேண்டும். கேள்வியின் பிரதி 24 - 7 - 78 ந் திகதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக, யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். கேள்விகொண்ட கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடுதல்வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த மூன்று நாட்களுக்குள் ஒப்பந்தம் எழுதி, மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்திசெய்து பாரம் தரவேண்டும்.

ஏனைய விபரங்கள் இக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலை

1. உரும்பராய் சந்தை கட்டிடம்.

த. சின்னத்துரை,
விசேட ஆணையாளர்,
உரும்பராய் - ஊரெழு
பட்டினசபை.
5-07-78. 9759

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/14242

ஆ. கனகசபை சுப்பிரமணியமும்
பெண் செல்வலெட்சுமியும் இருவரும்
நெடுங்காடு, காரைநகர் வடக்கு.

வழக்காளி

எதிராக
கந்தையா பாலசுந்தரம் பெண்
ரோசம்மாவும் இருவரும்
ஆலடி, மூளாய் ரோட், சுழிபுரம்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/14242-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1978-ம் வருஷம் ஆவணி மாதம் 4-ந் (நாலாம்) திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 10792/79-ம் 1973-12-20 தொடக்கம் 1974-7-18 வரைக்கும் 1000 ரூபாய்க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 612-65 (தீர்வைத் தொகையில் 1975-2-13-ந் திகதி 2000/-ம் செலவில் 1 பகுதி 300/-ம் கழிக்கப்படவேண்டும். மே மாதம் தொகையில் ஒரு பகுதியாக 6000/- கழிக்கப்படவேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குச் சங்கானைக் கோவிற்பற்று மூளாய் இறை

கம்பிமானை நி. பர. 6 ஆறும் வீடும் கிணறும் வான் பயிர் செய்பயிர்களும் தெற்கெல்லைக் காணியில் இருக்கும் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் கிழக்காக ஒழுங்கை முகப்பிலிருந்து தண்ணீர்ப்பாதை உரித்தும் இதற்கு எல்லை கிழக்கு எல்லை மகாதேவன் கைம்பெண் நகுலாம்பிகைக்குரிய ஆதனம் வடக்கு கதிரவேலு நராணிக்குரிய ஆதனம் மேற்கு அப்பாப்பிள்ளை குலவீர சிவசக்தி ஆதனமும் தெற்கு வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளைக்குரிய ஆதனமும். ஆறு முழ அகலங் கொண்ட ஒழுங்கை முகப்பும்.

எஸ். சங்கரப்பிள்ளை, ஜே. பி.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

வேல்பதி,
புத்தூர்.
19-6-78 9752

---

## தசாகாதி கிரகயக்ஞ அறிவித்தல்

### ஏரம்புஜயர் - இராமசாமிக் குருக்கள்

அனலைதீவு ஐயனார் ஆலய ஆதீன அர்ச்சகரும், நெடுந்தீவு சொர்ணம்மாள் இரத்தினசாமிக்குருக்கள், காலஞ்சென்ற பொன்னம்மாள் குமாரசாமி சர்மா இணுவில், சுந்தரம்மாள் நடராஜ ஐயா, புங்குடுதீவு. பராசக்தி அம்மா செல்லையாக் குருக்கள் ஆகியோரின் சகோதரரும், புங்குடுதீவு சிவன்கோவில் பரமேஸ்வரி அம்மா, கொழும்பு. கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் சிவராமலிங்கக் குருக்கள், புங்குடுதீவு. மாரியம்பாள் கோவில் கெங்காதரக் குருக்கள், அனலைதீவு ஐயனார் கோயில் கிருஷ்ணமூர்த்தி சர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், மீனாட்சி சுந்தரக்குருக்கள், அமிர்தாம்பிகை, விசாலாக்ஷி அம்மாள், சாவித்திரிதேவி ஆகியோரின் மாமனாரும், சொர்ணம்மாளின் அன்புக் கணவருமாகிய ஏரம்புஜயர் இராமசாமிக் குருக்கள் 1-7-78-ல் சிவபதமடைந்ததையிட்டு, எதிர்வரும் 10-7-78 திங்கட்கிழமை முதல் 13-7-78 வியாழக்கிழமை வரை நடைபெறும் தசாகாதி கிரகயக்ஞ கிரியைகளின் போது உற்றூர், உறவினர், அன்பர்கள் யாவரும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்
9751

---

EME
Excellent manufactures Ent rprises
எக்சலென்ட் மனுபாக்சர்ஸ்
என்ரபிரைசர்ஸ்
ஸ்தாபனத்தார் ஒழுங்குசெய்துகொடுக்கும்

## அரியசந்தர்ப்பம்

ISUZU ELF 250, 2 ton flat bed long & short body
CARGO TRUCK
முற்றிலும் திருத்தியமைக்கப்பட்ட
TLD 53 1971--75 மொடல்கள்

புதிய பற்றறிகள், புதிய ரயர்களுடன் மிகக்குறைந்த விலைகளில் வாங்கிக்கொள்ள விரும்புவோர் எம்முடன் முழுவிபரங்கட்கும் தொடர்புகொள்ளவும்.

புதுப்பிக்கப்பட்ட பலரக இசுசு ரொயோட்டா, கிரேு ஆதிய யப்பானிய லொறிகள், டிரக்குகள், வான்கள், கார்கள், மோட்டார் சைசிக்கிள்கள் எவையாயினும் எங்களுடன் தொடர்பு கொண்டால் குறைந்தவிலையில் குறுகிய காலத்தில் பெற்றுத்தரப்படும்.

விலாசம்:
107/4,5 சங்கமித்தை மாவத்தை
கொழும்பு--13
தொலைபேசி: 35281
9747

ஈழநாடு
The Eelanaadu

# ஒருலட்சம் தொன் அரிசி இலங்கையிலிருந்து ஏற்றுமதி

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஒரு லட்சம் தொன் அரிசி இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கி உள்ளது.

இத்தகவலை நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

நமக்குத் தேவையான அரிசி போதியளவு இருந்தும் மக்கள் மாவையே உணவாக உட்கொள்கின்றனர். இந்நிலையிலேயே அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

ஒரு றுத்தல் மாவை 2 ரூபா வீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து 85 சதத்துக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு உள்ளது. இந்த மான்யத்திற்காக அரசுக்கு 4 கோடி ரூபா மேலதிகமாகச் செலவாகிறது. இத்தொகை மீதப்படுத்தப்பட்டால் 1 லட்சம் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என்றும் திரு. மெல் கூறினார். (இ)

---

## ரயில்வேக்கு ரூ. 8 கோடி நஷ்டம்

இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு சென்ற ஆண்டில் ஏழுகோடி தொண்ணூற்றெட்டு லட்சம்ரூபாய் அதாவது சுமார்எட்டுக் கோடிரூபாய் நஷ்டமேற்பட்டதாக ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

நாட்டின் கரையோரப் பாதையிலும்சரி வேறு எந்தப் பாதையிலும் சரி சன நெரிசல் இல்லாமல் புகையிரதங்கள் செல்வது அபூர்வம். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் தினசரி நான்கு ரயில்சேவைகள் நடைபெறுகின்றன. இந்த ரயில்களில் இருந்து பிரயாணம் செய்பவர்களைவிட இடமின்மையால் நின்று பயணம் செய்பவர்களின் தொகைதான் அதிகம்.

போதிய ரயில் என்ஜின்கள் இல்லை; ரயில் பெட்டிகளும் போதியளவு இல்லை; இருக்கும் ரயில் பெட்டிகளில் வெளிச்சம், தண்ணீர் வசதிகள் மிகக்குறைவு. இப்படியிருந்தும் ரயில்களில் பயணம் செய்யும் மக்களின் தொகை அதிகரித்து வருகின்றதேயொழிய குறையவில்லை.

ஆனாலும் சென்ற ஆண்டில் சுமார் எட்டுக்கோடி ரூபாய் புகையிரதப்பகுதிக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றால் சாதாரண விஷயமல்ல.

புகையிரதப் பகுதியின் செலவில் மேலதிகநேர வேலைச் சம்பளமும் ஓய்வூதியமும் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் புகையிரத சேவை இருபத்திநான்கு மணிநேரமும் இயங்கி வருவதனால் மேலதிக நேரவேலை தவிர்க்க முடியாததாகி உள்ளதென்றும் அதே அறிக்கை தெரிவிக்கிறது.

இருபத்திநான்கு மணி நேரமும் தொடர்ந்துஇயங்க வேண்டிய சேவைகள் பல உண்டு. ஆனால் அவை அத்தனையும் ஆண்டில் கோடிக் கணக்கில் நஷ்டப்படுவதானால் அவற்றினால் யாருக்கு என்னபயன்?

கடந்த ஆண்டில் போல இனியும் புகையிரதப் பகுதி நஷ்டமடைவதற்கு இடமளிக்கக் கூடாது.

புதிய ரயில் என்ஜின்களும், புதிய ரயில் பெட்டிகளும் இறக்குமதி செய்யப்படவிருப்பதாகவும் பிரயாணக் கஷ்டம் விரைவில் நீங்கி விடுமென்றும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சமயத்தில் சென்ற ஆண்டில் சுமார் எட்டுக் கோடி ரூபாய் புகையிரதப் பகுதிக்கு நஷ்டமென்ற செய்தி யாருக்கும் மகிழ்ச்சி அளிக்க முடியாது. பஸ் கட்டணம் உயர்ந்துவிட்டது. ரயில்வேயின் நஷ்டத்தை ஈடு கட்டுவதற்கு ரயில் கட்டணத்தையும் உயர்த்த வேண்டியேற்படலாம். இது பொதுமக்களைத்தான் பெரிதும் பாதிக்கும்.

நஷ்டத்தில் நடைபெறும் கூட்டுத்தாபனங்களை மூடிவிடப்போவதாக அமைச்சர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

நஷ்டத்தில் நடைபெறும் போக்குவரத்துச் சேவைப் பகுதியை என்ன செய்யலாம்? சம்பந்தப்பட்ட அமைச்சு சிந்திக்கட்டும்.

---

## தலைமன்னாரில் அவதி

(மன்னார்)

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையைவிட்டு வெளியேறி தாயகம் செல்லும் இந்தியப் பிரஜைகள் தலைமன்னாரில் மிகவும் கஷ்டமுறுகின்றனர். கப்பலில் ஏறுவதற்கு முன் பரிசோதனைக்காக மரப் பாலத்தில், கொளுத்தும் வெயிலில் 'கியூ'வில் நிற்கும் பரிதாபக்காட்சியையும் குழந்தைகள் வயோதிபர் குடிதண்ணீரின்றி அவதியுறும் காட்சியையும் காணக்கூடியதாக இருக்கின்றது. போதிய அதிகாரிகள் இல்லாததால் பரிசோதனைகள் முடிவதற்கு பல மணிநேரதாமதம் எடுக்கின்றதாம். (உ)

---

## இன்று நடக்கும் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரித் தமிழ்க்கலவன் பாடசாலைக் கல்விக்கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. வடமாநிலவித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு காட்சியைத் திறந்து வைப்பார். நல்லூர் வட்டாரக்கல்வியதிகாரி திரு. கு. சோமசுந்தரம் மங்கல விளக்கேற்றி வைப்பார். (அ)

---

## சரவணை ஐயனார் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை மயிலப்புலம் ஐயனார் கோயில் வருடாந்த மகோற்சவம் சிறப்புடன் 9 தினங்கள் நடைபெற்று முடிந்தது.

விசேட அபிஷேகங்களுடன் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. (உ)

---

## "பொருள் திரட்டுவதல்ல பேரின்ப வாழ்வு"

### - செல்வி அப்பாக்குட்டி

(மாவிட்டபுரம்)

"இந்தஉலகத்தில்பிறவியின் பயனை அடைவதே நமது குறிக்கோளாக அமையவேண்டும். மேலானமனிதப்பிறவி எடுத்த நாம் மேலும்பிறவிகள் எடுத்து உழலாது நித்திய பேரானந்தப் பெருவாழ்வானமுத்தியின்பத்தை அடையமுயலவேண்டும். அதற்காக நமது வாழ்வையே அர்ப்பணித்துவிடல் வேண்டும்."

இவ்வாறுபுன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேகதின விழாவில் கலந்து சிறப்புரையாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

மேற்படி ஆலயத்தில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு விசேட சங்காபிஷேகம், ஆராதனைகள் இடம்பெற்றன. சொற்பொழிவு நிகழ்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில், "நாம் பிறந்ததன் பயன் பொன்னையும், பொருளையும் அனுபவிப்பதற்காக வல்ல. பொன்னையும், பொருளையும் திரட்டிவைக்காது இறைவனது எண்ணங்களை மனதில் தேக்கிவைக்கவேண்டும். அதன்மூலம் அவன் அடியை அடைய முயலவேண்டும். சமயங்களுக்கெல்லாம் தலையாயதானநமது சைவசமயம் காட்டும்வழியில்முத்தியின்பம் அடைவதே பிறவியின் பயனாகும்" என்றார். (உ)

---

# '15 தினங்கள் நடுக்காட்டில் சமைத்து உண்டோம்"

## சன்சோனி விசாரணையில் மொனருகல வாசி சாட்சியம்

(கண்டி)

பதினைந்து தினங்களாகக் குண்டர்களுக்குப் பயந்து தமது குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர்கள் நடுக்காட்டில் சமைத்து உண்டதுபற்றி மொனருசல வாசியான முனியப்பர் முத்துசாமி என்பவர் கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் சாட்சியமளிக்கையில் விபரித்தார்.

இவர் தமது சாட்சியத்தில் சொன்னதாவது:-

"நானும் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் 15 இரவுகளையும் பகல்களையும் பீதியுடன் காட்டில் கழித்தோம். அம்பாறை, கல்முனை பகுதி முஸ்லிம்கள் எமக்கு மரக்கறிவகைகளையும் உணவு வகைகளையும் தந்துதவினர். இவற்றை நடுக்காட்டில் நானும் என் குடும்பத்தைச் சேர்ந்த 13 பேரும் சமைத்து 15 தினங்கள் உண்டோம். என் வீட்டு வாசலும் ஆகஸ்ட் 23ம் திகதி வந்த ஒன்பது பேர் சத்தம் போட்டனர். அடுத்த கிராமத்தைச் சேர்ந்த சிங்களவர்களாகிய மேற்படி நபர்களில் மூன்று பேரிடம் துப்பாக்கிகள் இருந்தன. இவர்களைக் கண்டு பயந்த நான் என் குடும்பத்தாரைப் பின் கதவால் காட்டுக்கு அனுப்பினேன். வந்தவர்களில் சிலர் என் தோட்டத்தில் கூலி வேலை செய்பவர்கள். இவர்கள் என்னைப் பயமுறுத்திய பின் வீட்டை உடைத்துக் கொள்ளையிட்டனர்.

சரும்புச் செய்கையால் 80,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. நான் பிறந்தது இலங்கையில், ஆனால் இனிமேல் வாழ விரும்புவது இந்தியாவில்" என்றார். (உ)

---

## "கலைஞர்தம் பெருமைதனை உணர்த்தியவர் அண்ணா"

(நெல்லியடி)

"ஆரம்பகாலத்தில் மக்களால் இழிவாகக் கருதப்பட்ட நமது தமிழ் நாடகக் கலைஞர்கள், அறிஞர் அண்ணா நாடகத்துறையில் காலடியெடுத்து வைத்த காலத்திலிருந்து தான் மக்களால் பாராட்டப்பட்டார்கள்" என்று கரவெட்டி அத்துளு அம்மன் ஆலய வீதியில் நாடகக் கலைஞர் திரு. வீ. மகாலிங்கத்தின் (மகாலி) கலைச்சேவையைப் பாராட்டி நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பாராட்டி உரை நிகழ்த்திய கரவைக் கிழார் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு. எஸ், செல்லையா தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் கரவைக்கிழார் தொடர்ந்து பேசுகையில் "சீனத் தலைவர் மா-சே-துங் போன்றே நமது அறிஞர் அண்ணாவும் தமிழ் நாட்டில் சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டார். நாடகத்துறை வக்களை நல்வழிப் படுத்தவும் நாட்டு நிலையை எடுத்து விளக்கவும் ஏற்றதுறையாகும். அந்த வழியினிலே நமது மகாலியும் சிறுவயது முதல் உழைத்து வந்துள்ளார் மகாலியின் கலைச்சேவை இலைமறைகாய் போலிருந்தாலும் அவரின் கலைச்சேவை அளப்பரியதாகும். நமது கலைஞர்களும் பாராட்டப்பட்டால் தான் அவர்கள் முன்னேற முடியும். இதனை நமது மக்கள் நன்கு சிந்தித்து செயற்படல் வேண்டும். நாடகக் கலைஞர்களும் தியாகிகள் போன்று முதலில் ஏச்சுக்கும் ஏளனத்திற்கும் உட்பட்டாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்படுகின்றார்கள்" என்றார்.

திரு. வீ. மகாலிங்கத்தின் கலைச்சேவையைப் பாராட்டி அன்னாருக்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து பேசுகையில்:

இவரின் கலைச் சேவையை பாராட்டுவது போன்று மற்றைய உள்ளூர் கலைஞர்களின் கலைச் சேவையையும் நாம் பாராட்டவேண்டும். அவர்களை கௌரவித்து ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கி அவர்களின் உயர்விற்காக நாம் எம்மாலானவற்றை செய்தல் வேண்டும்" என்றார்.

ஆசிரியர் திரு. எஸ். கார்த்திகேசு. திரு. சிவபாதம் ஆகியோரும் திரு. மகாலிங்கத்தின் கலைச்சேவையைப்பாராட்டிப் பேசினார்கள். (உ)

---

## மணிவாக்கு

மனிதனுடைய சுகதுக்கங்களுக்கும் வெற்றி தோல்விகளுக்கும் மனமே காரணம். அதனுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தே மனிதனுடைய பண்பும் அமைகிறது.

-கவிகாளிதாஸன்.

---

## கம்யூ. 35வது ஆண்டு நிறைவு சொற்பொழிவு

(யாழ்யாணம்)

இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்க ஸ்தாபிதத்தின் 35-வது ஆண்டு நிறைவையொட்டி இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (மாக்ஸிஸ்ட்- லெனினிஸ்ட்) செயற்குழு உறுப்பினர் திரு. வி. ஏ. கந்தசாமி ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை சொற்பொழிவு நிகழ்த்துவார். (உ)

---

## ஒன்றரைலட்சம் செலவில் அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் திறந்தவெளி அரங்கு ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

புதிய அதிபர் திரு. எஸ். சிவப்பிரகாசத்தின் முயற்சியினால் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இந்த அரங்குக்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியுள்ளார்.

இந்த அரங்கிற்கான மேடை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. (கா-இ)

# “பிரதமர் தேசாயின் மகன் மீதானஊழல் குற்றச்சாட்டே என்னை வெளியேற்றியமைக்கு காரணம்”

## பிரதமர் தம்மீது கோபம் கொண்டிருந்தார் என்றும் கூறுகிறார் சரண்சிங்

புதுடில்லி, ஜூலை 6

“பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயின் மகன்மீது சுமத்தப்பட்ட லஞ்சஊழல் குற்றச்சாட்டுக்கள்மீது விசாரணைசெய்வதற்கு ஒருவிசாரணைக்கமிஷன் நியமிக்குமாறு நான்வற்புறுத்தினேன். அன்றிலிருந்தே திரு. தேசாய் அவர்என்மீதுகோபம்கொண்டிருந்தார். இதன்காரணமாகவே நான்அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளேன்.

“நான் கேட்டுக்கொண்டபடி அன்று கமிஷன் ஒன்று அமைத்து விசாரணைசெய்யப்பட்டிருந்தால் பிரதமரின் மதிப்பும்,அரசின் மதிப்பும் பன்மடங்கு அதிகரித்திருக்கும்”

இவ்வாறு இந்திய ஆளும் ஜனதா கட்சி அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் கூறியுள்ளார்.

நேற்று தமது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் திரு. சரண்சிங் மேலும் கூறியதாவது:.

நான் தவறுசெய்திருந்தால் என்னிடம் விளக்கம் கோரியிருக்கலாம். அதை விடுத்து என்னிடம் விளக்கம் எதும் கோராமல் என்னைப் பதவியிலிருந்து வெளியேற்றியமைக்கு திரு. தேசாய் என்மீது கொண்டிருந்த கோபமே காரணம் என்பது தெளிவாகிறது.

## ஒருவர் கைது

(உடவளவை)

உடவளவ பொலிஸ் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து பணம் உட்பட 14.000 ரூபா பெறுமதி மிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டது தொடர்பாக ஒருவர் கைதாகியுள்ளார். (உ)

## “சிங்களப் பரீட்சையில் ஏன் சித்தியடையவில்லை?” விளக்கம் கோருகிறது சுகாதாரப்பகுதி

[பண்டத்தரிப்பு]

சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் இதுவரை சித்தியடையாதிருப்பதற்கு காரணம் காட்டுமாறு விளக்கம் கோரி, சுகாதார இலாகா தலைமைப் பீடம், சுகாதார இலாகாவில் கடமையாற்றும் மருத்துவ மாதர்களுக்கு தனித்தனியாகக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. கடந்த 197?ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு வரை தோற்றிய சிங்கள தேர்ச்சிப் பரீட்சைகளின் சுட்டிலக்கம், ஸ்தானம், பெறுபேறு ஆகிய விபரங்களையும் தெரிவிக்குமாறு இக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. ஒரு வார காலத்திற்குள் இதற்கான பதிலை மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருக்கு ஊடாக அனுப்பி வைக்குமாறும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# காந்தி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்

திருமதி காந்தியின் விவகாரம் குறித்து கருத்துத்தெரிவிக்கையில் அவர்மேலும்கூறியதாவது:-

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் திருமதி காந்தி என்றோ காவலில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். அத்துடன் திருமதி காந்திமீது விசாரணை நடத்த விசேட நீதிமன்றம் ஒன்று நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விவகாரம் மீதான விசாரணைகளை சாதாரண நீதிமன்றத்தில் மேற்கொள்வதானால் 10 ஆண்டுகளுக்குமேல் வீணைக் காத்திருக்கவேண்டி ஏற்படும். எனவேதான்விசேஷ நீதிமன்றத்தில் இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என வலியுறுத்தினேன. (இ)

## உரிமை மீறல் விசாரணைக் குழுமுன் இந்திரா ஆஜர்

புதுடில்லி, ஜூலை 6

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று ‘லோகசபை உரிமை மீறல்’ தெரிவுக்கமிட்டி முன்னிலையில் ஆஜரானார்.

திருமதி காந்தி சபைக்கு வெளியே இருந்து கொண்டு சபை உறுப்பினர்களின் பேச்சு தொடர்பாக சபையின் உரிமையைமீறும் வகையில் அறிக்கை வெளியிட்டார் என்று அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு இதுபற்றி விசாரிக்க ஆட்சிமன்றத் தெரிவுக்குழு ஒன்று தெரிவுசெய்யப் பட்டது தெரிந்ததே. (இ)

## 5 ஹரியானா அமைச்சர்களும் ராஜினமா

புதுடில்லி, ஜூலை 6

ஹரியானா முதன் மந்திரி திரு. தேவிலாலை பதவியிலிருந்து ராஜினமாச்செய்யுமாறு ஜனதா கட்சியின் ஆட்சிமன்றக்குழு கோரியதன் எதிரொலியாக ஹரியானா மாநில அமைச்சரவையிலிருந்து 5 அமைச்சர்கள் தமது பதவியை ராஜினமாச்செய்துள்ளனர்.

இதேவேளையில் திரு. தேவிலால் தமது பதவியை ராஜினமாச் செய்யமறுப்புத் தெரிவித்துள்ளார். (இ)

## மதுலிமாயி நாடுதிரும்பினர்

புதுடில்லி, ஜூலை 6

ஜனதா கட்சியில் தோன்றியுள்ள நெருக்கடியை அடுத்து நியூயோர்க் விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனதா கட்சியின் பொதுக்காரியதரிசிகளில் ஒருவரான திரு. மதுலிமாயி தமது விஜயத்தை இடையில் நிறுத்திவிட்டு அவசரமாக நாடு திரும்பினர். (இ)

## சஞ்சய் வழக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி; ஜூலை 6

திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சய் காந்திக்கு எதிராக ‘ஷா’ கமிஷனல் தொடரப்பட்ட வழக்கு இம் மாதம் 15ந் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

ஷா கமிஷன்முன் ஆஜராகத் தவறினர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே சஞ்சய் காந்திமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பிரதம மெட்ரபொலிட்டன் நீதிபதி திரு. செய்ன் முன்னிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. [இ]

# கானா அதிபர் ராஜினமா!

ஆக்ரா, ஜூலை 6

கானா அதிபர் கேணல் இக்னேஷியஸ் கே-ஆச்செம்பொங் தமது பதவியிலிருந்து ரர்ஜினமாச் செய்துள்ளார்.

கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் கேணல் பொங் இரத்தம் சிந்தாப் புரட்சிமூலம் பதவிக்கு வந்தார்.

இராணுவத் தலைமை அதிகாரி பதவியிலிருந்தும் திரு. பொங் வெளியேறியுள்ளார்.

இதையடுத்து உதவி ஜனதிபதியாக இருந்த லெப்டினன்-கேணல் ஜெனரல் அக்குப்போ ஜனதிபதியாகப் பதவியேற்றுள்ளார். (இ)

## • சிறுமி மீது பலாத்காரம்? 60 வயது நபர் பிணையில் அனுமதி

(பண்டத்தரிப்பு)

13 வயதுச் சிறுமி மீது பலாத்காரம் பிரயோகித்த தாக குற்றம்சாட்டப்பட்ட 60 வயது நபர் ஒருவரை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

மாதகல் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுமி இரவுநேரத்தில் தமது பேரன்பேத்தி ஆகியோருடன் நித்திரை செய்துகொண்டிருந்த சமயம் மேற்படி நபர் அவர்மீது பலாத்காரம் பிரயோகித்த தாக சங்கானைப் பொலிசார் இவ் வழக்கை தாக்கல்செய்திருந்தனர். நீதிபதி சந்தேக நபரை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மறு விசாரணையை ஆகஸ்ட்மாதம் ?ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# பாகிஸ்தானில் புதிய அமைச்சரவை

## 17 பேரில் ஒருவர் பெண்

இஸ்லாமாபாத், ஜூலை 6

பாகிஸ்தானில் புதியஅமைச்சரவை ஒன்றை இராணுவத் தலைமை நிர்வாகி ஜெனரல் ஸியாவுல்ஹக் நியமித்துள்ளார்.

இராணுவத் தலைமை நிர்வாகி ஜெனரல் ஸியாவுல்ஹக் அமைச்சரவையின் தலைமைப் பதவியுடன் வெளிநாட்டுவிவகாரம், பாதுகாப்பு அமைச்சுகளின் பொறுப்பையும் கையேற்றுள்ளார்.

ஒருவருட காலத்திற்குமுன்னர் புரட்சிசதி ஒன்றின்மூலம் ஜனப் சல்பிகார்அலி பூட்டோவின் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இதுவரை ஜெனரல் ஸியாவுல்ஹக் தலைமையிலான இராணுவ நிர்வாக அதிகாரிகளைக்கொண்ட ஆலோசனைச் சபை ஒன்றே ஆட்சிநடத்தி வந்தது.

இப்போது இச்சபைக்குப் பதிலாக அமைச்சரவைநியமிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் 17 அமைச்சர்களும் 5 உதவி அமைச்சர்களும் அங்கம் வகிப்பர். இவர்களுள் ஒருவர் பெண். அநேகர் முஸ்லிம்லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.


# வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்
0 நீடித்து உழைப்பதும்
0 தன்னிகரற்றதுமான

‘றிவர்’ பிரான்ட்
கல்வனைஸ்ட் இருப்புத் தகடுகள்
பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு--12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: ?30

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
**வெள்ளிக்கிழமை விரதம்**

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
**Stalking Moon**
(Western)


## வைத்தீஸ்வரா பழையமாணவர் தினம்

(யாழ்ப்பாணம்)

வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலயப் பழைய மாணவர் தினம் இம்மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட விருக்கிறது.

காலை 9 மணிக்குக் கலந்துரையாடலும் 10 மணிக்கு கலை விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெறும். பிற்பகல் ஒருமணிக்கு மதிய விருந்து நடைபெற்று அதனைத் தொடர்ந்து 2 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெறும். (அ)


**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா-அசோகன்-மனோகர்-சோ
**க ண வ ன்** புத்தம் புதிய பிரதி

**REGAL** Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
KEN CLARK in
**Road To Fort Alamo**
(Scope Color)
From ; 8-7-78
25th YEARS IMPRESSION (Color)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - ஸ்ரீவித்யா
ஜெயசுதா - சுந்தரராஜன்
**அபூர்வ ராகங்கள்** (புத்தம் புதிய பிரதி)
8-7-78 முதல் **அ க் பு ர்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பல வெற்றிப்படங்களின் இயக்குநர் K. பாலசந்தரின் மற்றுமோர் பிரமாண்டமான படைப்பு. முன்பு பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள். பார்க்காதவர்கள் பார்க்க ஆவலுறுகின்றனர்.
ஜெய்சங்கர் - லக்ஷ்மி - நாகேஷ் - மனோகர்
நடித்த
கலாகேந்திராவின்
**நூ ற் று க் கு நூ று**
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
பாலாஜி - அஞ்சலிதேவி
**நாகநந்தினி**

**லிடோ** (யாழ்.நகர்) போன்: 7692
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**


கட்டிடப்பொருள்

## சாவ. தொகுதி மக்கள் கஷ்டம் நீங்குகிறது

(மட்டுவில்)

சாவகச்சேரியில் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை சாவகச்சேரி எம்.பியின் பாரியார் திருமதி இரகுபதி நவரத்தினம் மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்தார்.

சாவகச்சேரி எம்.பி.யின் பாரியார் திருமதி இரகுபதி நவரத்தினம் சமயாசார முறைப்படி மங்களவிளக்கேற்றி நாடாவைவெட்டிப் புதிய நிறுவனத்தைத் திறந்து வைத்தார். திறப்பு விழாவைத் தொடர்ந்து திருமதி இரகுபதி நவரத்தினம் தமது உரையில் கூறியதாவது:.

''நியூசிற்றிஹாட்வெயர் ரேடர்ஸ் என்ற இந்த ஸ்தாபனம் சாவகச்சேரித் தொகுதி மக்களுக்கு கட்டிடத் தேவைகளுக்கு உற்ற துணையாக விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதை இங்கு ஸ்தாபித்ததின் பயனாக நமது தொகுதி மக்கள் பலமைல் தூரம் அலைந்து கஷ்டப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைஅடியோடு அகன்று விட்டது. வியாபார நோக்குடன் இந்த ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் இதன் உரிமையாளர் திரு. நவரத்தினம் நோக்கம் புனிதமானது''.(அ)

வயாவிளான்

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்றைய மோதல்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் மின்னொளியில் நடாத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2-ம் வகைச் சுற்றுப் போட்டி ''சி'' பிரிவில் மயிலிட்டி இளங்கோ வி.க.வை எதிர்த்து நீர்வேலி விநாயகர் வி. கவும் இணுவில் இந்து வி.கவை எதிர்த்து நீர்வேலி ஐ. வி:கவும்.வி. கவும் ஆவரங்கால் ஐக்கிய வி. கவை எதிர்த்து மிரியன்காடு உதயதாரகை வி. க. ''பி'' யும் தெல்லிப்பளை திருமகள் வி.க.வை எதிர்த்து புளியங்கூடல் மகாமாரி வி. க. ''பி'' யும் மோதுகின்றன.

## யாழ்.கல்லூரி பழையமாணவர் வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

கிரிக்கெட் போட்டி கல்லூரி மாணவர்களுக்கான இயல் இசைப்போட்டி என்பனவும் இடம் பெறும். (உ)

## நாடு திரும்பினர்

மாஸ்கோ, ஜூலை 6

விண்வெளியில்ஆய்வுநடத்திவரும் 'சல்யூட்' ஆய்வு கூடத்தில் மேலும் ஆய்வுகளை நடத்துவதற்காக கடந்தவாரம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட சோவியத், போலந்து வீரர்கள் இருவரும் நேற்று பூமி திரும்பினர்.

இதற்குமுன்னர் அனுப்பப்பட்ட இருவீரர்களும் தொடர்ந்து விண்வெளி ஆய்வு கூடத்தில் ஆய்வு நடத்திவருகின்றனர். (இ)


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
**மாணவன்**


# ரயில்களுக்கு இனி நவீன சமிக்ஞை

(கொழும்பு)

ரயில்வே திணைக்களம் நவீன சமிக்ஞை முறைகளைக்கையாளவிருக்கிறது.

தூரசேவைகள் தற்போதைய சமிக்ஞை முறையினாலேயே தாமதமாகின்றன என்று கருதப்படுகிறது.

இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொகமத் சுவீடிஸ் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

தற்போது 564 ரயில்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன என்று திணைக்களம் தெரிவித்தது. விரைவில் புதிய 32 ரயில் எஞ்ஜின்கள், 180 பிரயாணிகள் பெட்டிகள், 300 சரக்குப் பெட்டிகள் ஆகியன பாவிக்கப்படவுள்ளன. (உ)

# செய்திச் சுருக்கம்

### குழாய் நீர் விநியோகம்

(சுழிபுரம்)

பொன்னாலையில் குழாய் மூலம் வழங்கும் குடி தண்ணீர் சேவை புனரமைப்புக்கான வேலைகள் விரைவில் நடைபெறவுள்ளன. சுழிபுரம் கிராம சபை விசேட ஆணையாளர் மேற்படி வேலைகள் நடைபெறுவதற்கான ஒப்பந்தத்தை கோரியுள்ளார்.

ஃ ஃ ஃ

### பொற்றொழிலாளர்

(மட்டக்களப்பு)

பொற்றொழிலாளருக்கு வழங்கப்படும் கோட்டாத் தங்கத்தின் விலை உயர்வினால்வேலைவாய்ப்பிழந்து திண்டாடும் பொற்றொழிலாளருக்கு அரசாங்கம் வாழ்வழிப்பதற்கு முன்வர வேண்டும்' என்று பெரிய போரதீவு கிராம முன்னேற்றச் சங்கத்தினதும், கிழக்கிலங்கை பொற்றொழிலாளர் சங்கத்தினதும் தலைவரான திரு. பூ. மா. செல்லத்துரை அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனாதிபதி, நிதி, திட்டமிடல் அமைச்சர், தொழிலமைச்சர் ஆகியோருக்கு திரு. செல்லத்துரை இது தொடர்பாக கோரிக்கை விடுத்துள்ளார். (உ)

ஃ ஃ ஃ

### மருத்துவமாது இல்லை

(மட்டக்களப்பு)

கன்னன்குடாப் பகுதியில் பொது மருத்துவ மாது இல்லாததால் அப்பகுதியிலுள்ள கர்ப்பிணிகள் மிகவும் அவதியுறுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இங்கு முன்னர் கடமையாற்றிய பொது மருத்துவமாது கடந்த மூன்று வருடங்களுக்கு முன் இடமாற்றம் செய்யப்பட்டார். ஆனாலும் இதுவரை அங்கு இப்பதவி காலியாகவே இருந்து வருகின்றது.

ஃ ஃ ஃ

### விவசாயவிழா

(வேலணை)

தீவுப்பகுதி கிருஷிக போதனாசிரியர் பகுதிகளில் உள்ள இளைஞர் விவசாயக் கழகங்கள் ஒன்றிணைந்து, அடுத்த மாத முற்பகுதியில் விவசாய விழா நடாத்த திட்டமிட்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

### கட்டடம் நிறுவ வெங்காயம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இக்கட்டிட நிதிக்கு நிலைய அங்கத்தவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த வெங்காயத்தை அன்பளிப்பாக வழங்கியிருப்பதுடன் தேவையான நிதியையும் வழங்கி உதவ முன்வந்துள்ளனர்.

ஃ ஃ ஃ

### விறகு விநியோகம்

(மாவிட்டபுரம்)

பலகால இடைவெளியின் பின்னர் காங்கேசன்துறை அரசாங்க மரக்காலைக்கு விறகு அனுப்பப்பட்டு பொது மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்பட்டது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இக்காலையில் விறகே இல்லாமலிருந்தமையால் பொது மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர்.

ஃ ஃ ஃ

### அரவம்தீண்டி மரணம்

(நெல்லியடி)

மடுத்திருப்பதிக்கு சென்ற தாயாரை எதிர்பார்த்திருந்த உருத்திரபுரம் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த சுனித்திரா என்ற இளம் பெண் அரவம் தீண்டி மரணமானார். நீர் இறைத்த மேற்படி பெண் பாம்பினால் தீண்டப்பட்டதும் உடனடியாக கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானாராம்.

ஃ ஃ ஃ

### வீதிபுனரமைப்பு

(நெல்லியடி)

நெல்லியடி பட்டினசபை ஞானாசாரியார் வீதியை செப்பனிட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இவ்வீதி முன்பு பள்ளமும் திட்டியுமாக காட்சியளித்தது. பாடசாலை செல்லும் மாணவர்களும் மற்றும் துன்னாலைப்பகுதி மக்களும்பெருநன்மையை இவ்வீதி புனரமைப்பால் பெறுவர். (உ)

ஃ ஃ ஃ

### சைக்கிள் திருட்டுகள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியில் அதிகரித்துவரும் சைக்கிள் திருட்டை ஒழிக்க பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர். சைக்கிள் திருடுவதே சிலரது தொழிலாக இருப்பதை விசாரணைகளிலிருந்து அறிந்துள்ள காங்கேசன்துறைப் பொலிசார் அவர்களைத் தேடி வலைவிரித்துள்ளனர். (உ)

**சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)**
**சுன்னாகம்**

**முக்கிய அறிவித்தல்**
**வியாபாரிகளுக்கு**

மேற்படி சங்கத்தில் கைத்தறிப் புடவைகள், சேட் வகைகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. நேரில் பத்திரங்களைக் காரியாலய வேலைநாட்களில் ரூபா 100.- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 21-7-78 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப் படும்.

**பொதுமுகாமையாளர்**
(சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்)

5-7-1987

9758

துரையப்பா கொலை வழக்கு

# வழக்கொன்றில் ஈடுபட்டது இதுதான் முதல் தடவை

## வி. என். குறுக்கு விசாரணையில் சாட்சி யோகநாதன் பதில்

(கொழும்பு)

துரையப்பா கொலை வழக்கு நேற்றுக் காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது யாழ. பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் நெறி யாளர் திரு.எம். யோக நாதனை சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழக்கொன்றில் சம்பந்தப் பட்டிருப்பது இதுதான் முதல் தடவையென்று சாட்சி யோக நாதன் சட்டத்தரணியின் கேள்வி யொன்றுக்குப் பதில ளிக்கையில் கூறினார்.

காலை 8 மணிக்கே நீதிமன்ற வளவிற்குள், விசாரணையைப் பார்ப்பதற்கு சனங்கள் கூடி விட்டனர். நீதிமன்ற வளவிற் குள் யந்திரத் துப்பாக்கி தாங் கிய பொலிஸ்காரரின் பலத்த பாதுகாப்பு இருந்தது, பொலி சார் 'காக்கிடோக்கி' யுடன் காணப்பட்டனர்.

விசாரணை காலை 9-50 மணி க்கு ஆரம்பமானது. சாட்சிய மளித்த யாழ். மாநகர பல நோக்கு கூட்டுறவு சங்க முன் னாள் நெறியாளர் திரு. எம். யோகநாதனை சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்; நேற்று பலதடவை சம்பவத்தின் பின் கோவிலுக்கு போகவில்லை என்றீர்? ஒரு தடவை பொலிசாருடன் போனேன்.

சட்: எப்போ? அடுத்தநாள்

சட்; எந்தப் பொலிஸ்? சங் கானைப் பொலிஸ்.

சட்; சங்கானைப் பொலிசு க்கு யாருடன் போனீர்?- சாரதி சிவனு.

சட்: எங்கு அவரைச் சந் தித்தீர்?- வானில் கூட்டிச் சென்றார்.

சட்: முதல் நாள் இரவு சங் கானைப் பொலிசுக்கு போனீர்? நிச்சயமாகச் சொல்லேலாது.

சட்; உமது வாக்குமூலம் எப்ப பதியப்பட்டது?- தெரி யாது.

சட்: இரவிலா?- பகலிலா?- பின்னேரம்.

சட்? அன்றும் பொலிசுக்கு துவக்குடன் போனீர்?-ஆம்.

சட்: நீர் சம்பவம் நடந்த நேரம்முதல் வாக்குமூலம் கொடுக்கும்வரை சாரதி சிவ னுக்கு கண்டதைக் கூறி னீரா?- இல்லை.

சட்; சிவனு கேட்கவுமில்லை நீர் சொல்லவுமில்லை?- பயந்து சொல்லவில்லை.

சட்: யாருக்கு பயந்தீர்- சூட்டுச் சம்பவத்தால் பயந் தேன்.

சட்: உடனடியாக பயம் இருக்கலாம்?- பயம் இருந் தது.

சட்: நீங்கள் ஒன்றும் காணுதபடியால்தான் சிவனுக் க்கு சொல்லவில்லை?- கண்டேன்.

சட்: சம்பவம்பற்றி எவரு டனும் கதைக்கவில்லை? பொலிசுக்குச் சொன்னேன்.

சட்: எந்தப் பொலிசை முதலில் சந்தித்தீர்? - பலரைக் கண்டேன்.

சட்: சம்பவம் நடந்த இட த்திற்கு யாரும் வந்தார்களா? -சங்கானைப் பொலிசுக்குப் போனேன்.

சட்; ஒரு உத்தியோகத் தரும் வந்தார்? -இருக்கலாம்.

சட்: யாழ். பொலிஸ் உத் தியோகத்தர் வந்தாரா? - சங் கானைப் பொலிஸ்நிலையத்தில் கண்டேன்.

சட்: என்ன நடந்தது என்று உம்மைக் கேட்டாரா? -இல்லை.

சட்: வேறு யாராவது கேட்டனரா? இல்லை.

சட்: நம்பிக்கையாக சொல் லுவீரா? - (மௌனம்)

சட்: அந்தநேரம் துரை யப்பா இறந்துவிட்டார் அவ சரப்பட்டு யாழ். யோக வேண்டியதில்லை, வானை விட்டு நீர் இறங்கினீரா? -இல்லை.

சட்: சாரதி சிவனும் இற ங்கவில்லை? -இல்லை.

சட்: உம்மைப்பொறுத்த வரை சங்கானைப் பொலிசுக்குப் போகும்வரை உமக்குத் தெரி யுமென்று ஒருவருக்கும் சொல்லவில்லை? - நடந்த வற்றை சொல்லவில்லை. சூடு பற்றிச் சொன்னேன்.

சட்: காரில் அன்று போனீரா?-ஆம்.

சட்; சம்பவம் பற்றி ஒரு வருக்கும் சொல்லவில்லை?- இல்லை.

சட்: ராஜரத்தினத்தை ஆஸ்பத்திரியில் கண்டபோதும் அவருக்கும் சொல்லவில்லை'- நான் அங்கு நின்றேன்.

சட்: நீர் ராசரத்தினத்திற் குச் சொல்லியிராவிட்டால் சிவனு சொல்லியிருக்கவேண் டும்?-எனக்குத் தெரியாது.

சட்; கோர்ட்டுக்கு வந்தது இதுதான் முதல்தடவை?-முன் பும் ஒருதடவை போனேன். இதுதான் வழக்கில் ஈடுபட் டது முதல்தடவை.

நீதிபதி: அப்படியானுல் இந்த வழக்கில் சம்பந்தப்பட் டிருக்கிறீரா?-ஆம். சம்பந்தப் பட்டிருக்கிறேன். (சிரிப்பு).

சட்: ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் போய்விட்டீரா?- ஆம்.

சட்: சம்பவம் பற்றித் தெரிந்திருந்தால் யாருக்கும் சொல்லிப்போட்டுப் போயி ருப்பீர்?-போய்விட்டேன்.

சட்; அதுவரை உமது பெயரை எந்தப் பொலிசா ரும் எழுதவில்லை? வாக்குமூலம் பதியவில்லை?-ஆம்.

சட்; வீட்டுக்குப் போய் வீட்டுக்காரருக்கு நடந்தவற் றைச் சொன்னீரா?-இல்லை. (சிரிப்பு)

சட்: அன்று சாப்பிட்டீரா? -இல்லை. (சிரிப்பு)

சட்: பொலிசுக்குப் போகும் வரை சாப்பிட்டீரா?-இல்லை. (சிரிப்பு)

சட்; சிவனு கதைத்தவரா?- கதைத்திருப்பார்.

சட்: கதைத்தவரா?-ஆம்.

சட்: நீர் பத்திரிகை பார்ப் பதுண்டா?-ஆம்.

சட்: இன்று பேப்பர் பார்த்தீரா?-இல்லை.

சட்: நேற்று?-ஆம்.

சட்: கோர்ட்டில் நடந்த சாட்சியம் படித்திருப்பீர்?- முந்தநாள் பேப்பர் வாசித் தேன்.

(விசாரணை தொடரும்)

### உடலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரையப்பாவின் உடலில் முத லாவது காயத்தின் ஊடாகப் பாய்ந்திருந்த சன்னம், இரண் டாவது காயத்தின் ஊடாக வெளியேறியிருந்தது. இவை றிவோல்வரினுல் சுடப்பட்ட தால் ஏற்பட்டிருக்கக்கூடிய காயங்கள். மூன்ருவது காயம் மார்பில் இரண்டாவது விலா எலும்புக்குக்கீழேயும் இருந்தது இடுப்பில், முதுகெலும்புக்குக் கீழே ஒரு சன்னம் இருந்தது. மூன்ருவது காயமும், ஏனைய உட்காயங்களும் றிவோல்வர் சூட்டினுல் ஏற்படுத்தப்பட் டன. 1, 2, 3 காயங்களும் வெவ்வேறு இரண்டு சூடுகளி ஞல் ஏற்பட்டவை. 1, 2, 3, 4 காயங்களும், 3 வெவ்வேற சூடுகளினுல் ஏற்பட்டவை. ஆருவது காயம், ஐந்தாவது காயத்தினுல் ஏற்பட்டது.

7, 8, 9, 10வது காயங்கள் பற்றியும் சட்ட வைத்திய நிபுணர் விளக்கினார்.

சூட்டுக்காயங்களினுல் ஏற் பட்ட ரத்தப்பெருக்கினுலும் அதிர்ச்சியினுலும் மரணம் சம் பவித்திருக்கிறது என்று டாக் டர் சுப்பிரமணியம் கூறினார். 1வது காயம் உயரமான ஒரு வரினுல் சுடப்பட்டதனுல் ஏற் பட்டிருக்கவேண்டும் என்றும் அக்காயம் கீழ்நோக்கி இருந் தது என்றும் அவர் சொன் ஞர். உடலில் இருந்து எடு த்த சன்னங்களை சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப் பதிகாரி திரு.ரணசிங்காவிடம் கையளித்ததாகவும் சொன் ஞர்.

அரச சட்டத்தரணியின் கேள்வியொன்றுக்குப் பதிலளி க்கையில் காயமடைந்ததின் பின் 15 - 30 நிமிடங்களுக் குள் மரணம் சம்பவித்திருக் கும் என்று சட்டவைத்தியர் சொன்ஞர்.

விசாரணை தொடர்கிறது. (ம)

31-ம் நாள்
நினைவாஞ்சலி



அமரர் ம. யேசுதாசன்

தோற்றம் - மறைவு
6-8-1937 7-6-1978

துயருறும்
மனைவி, மக்கள் உறவினர்

9763

### அடுத்தமாதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞலேயே சுவிப் டிக்கட்டின் விலை அதிகரிக்கப்படுவதாகவும் சபைத்தலைவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு சபைக்கு 1 கோடி 60 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்ததென் றும் அதற்கு முந்திய ஆண்டு 4கோடி ரூபாய் வருமானம் வந்ததென்றும் தலைவர் சொன் ஞர்.

### எம். ஜி. ஆர்....

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். உட்பட மற்றும் தலைவர் கள் அறிமுகம் செய்து வைக் கப்பட்டனர்.

இலங்கையில் தமிழர் விடு தலைக் கூட்டணியின் இன் றைய நிலை பற்றியும், அதன் அணியின் கீழ் தமிழர்கள் ஒரு முகப்பட்டிருக்கும் நிலைமை யையும், அதன் தலைமையில் உள்ள திரு. அ. அமிர்தலிங் கத்தின் முற்போக்குக் கண் ணோட்டம், உறுதியான மனப் போக்கு, அவருக்கு மக்களா தரவு பற்றியும் அவர், தாம் தாம் கலந்துகொண்டு உரை யாற்றிய பொதுக்கூட்டங் களில் தெளிவுபடுத்திஞர்.

திரு. பொன்னம்பலம், தமது தமிழ்நாடு விஜயத்தின்போது சகல கட்சித் தலைவர்களுட னும் பேச்சுவார்த்தை நடத் திஞர்.

இந்தியக் கம்யூனிஸ்கட்சி யின் தமிழ்நாடு மாநிலப் பொதுச் செயலாளர் திரு. மாணிக்கம், உதவிச் செயலா ளர் திரு. சீனிவாசன் ஆகி யோரையும் சந்தித்து, ஈழத் தமிழர் பிரச்னை, செந்தமிழர் இயக்கத்தின் நிலை என்பன பற்றியும் எடுத்துரைத்தார். ஈழத் தமிழர் பற்றிய பிரசுரங் களையும் அவர் கையளித்தார்.

செங்கல்பட்டு, சேலம், திருச்சி மாவட்டங்களின் சகல கட்சிப் பிரதிநிதிகளுடனும் அவர் பேசிஞர். சேலத்தில் நேரு அரங்கில் இருநாட் களாக நடைபெற்ற இந்தோ சோவியத் நட்புறவுக் கழகத் தின் மகாநாட்டிலும் அவர் கலந்துகொண்டார்.

தனியார்துறையா, பொதுத் துறையா இந்திய பொருளா தார சுபீட்சத்திற்கு வழிவகுக் கும் என்பதுபற்றிய கருத்தர ங்கிலும் கலந்துகொண்டார்.

#### கர்நாடக மாநிலத்தில்

கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில் தீன சேவா சங்கமும் தமிழ்மன்றங் களும் ஏனைய பொதுஸ்தாப னங்களும் இணைந்து அவருக்கு பொதுவரவேற்பளித்தன.

இநதிய கம்யூனிஸ்ட் கட்சி யின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் தொழிற்சங்கப் பிர முகருமான ஏ. எஸ். கே. ஐயங்காரின் இறுதிச்சடங் கிலும் திரு. பொன்னம்பலம் கலந்துகொண்டார்.

தாம் கல்விகற்ற தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் அவர் சென்ருர். அங்கு அவ ருக்கு அன்பான வரவேற்பளிக் கப்பட்டது. பழைய தாம் பரம் சேரியில் தாம் ஏனைய நண்பர்களுடன் இணைந்து ஆரம்பித்த ஆரம்ப பாட சாலை உயர்நிலைப் பள்ளியாக மாடிக்கட்டிடத்துடன் உயர்ந் திருப்பது கண்டு அவர் மகிழ் ச்சி தெரிவித்தார்.

இவர் தமிழகத்தில் 12 தின ங்கள் தங்கியிருந்தார். (உ)

### தொழிற்சங்க கூட்டணிக் காரியாலயம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தொழிற்சங்கக் கூட் டணியின் யாழ். மாவட்டக் கிளை அலுவலகம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை எதிர்க் கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்திஞல் திறந்து வைக்கப்படும்.

இக் காரியாலயம் யாழ். ஸ்ரான்லி வீதியில் திறக்கப் படவுள்ளது. (கெ)

### அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வெள்ளான் தெரு ஸ்ரீ ஞானவைரவர் அலங்கார உற்சவம் இன்று முதல் ஆரம்பமாகி எதிர் வரும் 22-ம் திகதிவரை சங்காபிஷேகமும் வியாச அர்ச் சனை திருவூஞ்சல் நிகழ்ச்சிகள் இடம் பெறும். (கெ)

### மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை

முத்துத்தம்பி

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த முத்துத்தம்பி கால மாகிவிட்டார். இவர், நாக ரத்தினத்தின் அன்புக் கணவ ரும், சோமசுந்தரம் (யாழ். அரசினர் வைத்தியசாலை), வாமதேவன் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), மகேந்திர ராசா (நொதேர்ன் இன்டஸ் றீஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சோ. கமலாதேவி, திருமதி வா. நகுலாம்பிகை ஆகியோரின் மாமனருமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் இன்று பிற் பகல் 12 மணிக்கு கோண்டா விலில் நடைபெறும். 9764

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக் கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜுலை மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu-Telephone: 389 - Registered as a News paper n Sri Lanka